செ.வெ. எண்: 722 நாள்: 05.12.2011

**<u>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம்<br>புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க<br>மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள்<br>காஞ்சிபுரம் மாவட்டத்தில் திடீர் ஆய்வு.</u>**

*******

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க இன்று (5.12.2011) காலை 11.00 மணி அளவில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் காஞ்சீபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் உள்ள கொளப்பாக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் நடத்தப்படும் மணப்பாக்கம், கெருகம்பாக்கம் I & II ஆகிய நியாயவிலைக் கடைகளை திடீர் ஆய்வு செய்தார்கள். அப்போது கூட்டுறவுச் சங்கங்களின் காஞ்சிபுரம் மண்டல இணைப்பதிவாளர் திரு. எஸ்.ஏ.மணிமாறன் மற்றும் சங்கத்தின் தனி அலுவலர் ஆகியோர் உடனிருந்தனர்.

இந்த ஆய்வின்போது, மேற்கூறிய நியாயவிலைக் கடைகளின் வருகைப் பதிவேடு, இருப்புப்பதிவேடுகளை பார்வையிட்டு சரக்கிருப்பினையும், ரொக்க இருப்பினையும், ஆய்வு செய்தார்கள். பின்னர், மேற்கூறிய நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் விலையில்லா அரிசியின் தரம் மற்றும் எடை ஆகியவை ஆய்வு செய்யப்பட்டன. அப்போது அத்தியாவசியப் பொருட்களை பெற்றுவந்த பொதுமக்கள் தரமான அரிசி வழங்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்தனர்.

அதன் பின்னர் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கொளப்பாக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் வழங்கப்படும் பயிர்க்கடன், நகைக் கடன், மாற்றுத் திறனாளிகளுக்கான கடன் மற்றும் மகளிர் குழுக்களுக்கு வழங்கப்படும் சுய உதவிக்குழுக் கடன்களை ஆய்வு செய்தார். ஆய்வின்போது, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் கடன் 99 சதவிகிதம் வசூல் ஆவதாகவும், தவணைத் தவறிய கடன் ஏதும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. இச்சங்கத்தில் இருப்பில் இருந்த உரங்கள் மற்றும் நகைகளின் எடை சரிபார்க்கப்பட்டது. மேலும், நகைக்கடன் வழங்கிய பதிவேடுகளில் நகை மதிப்பீட்டாளர், கடன் பெற்ற உறுப்பினர் கையொப்பம் ஆகியன உள்ளனவா எனவும் சரிபார்க்கப்பட்டது. சங்கத்தின் தீர்மானப் புத்தகம் ஆய்வு செய்யப்பட்டது.

ஆய்வுக்குப் பின்னர் இச்சங்கத்தின் கணினிமயமாக்கல் பணி முழுவதும் விரைவில் முடிக்கப்படவேண்டும் எனவும், அனைத்து வகையான கடன்களையும் வழங்கி சங்கத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டை எய்தவேண்டும் எனவும் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**